பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 14 செவ்வாய்க்கிழமை 30.11.2021 கதிர் 253

### தனித் தமிழ் பிரதேச சபையான

## வெருகல் சபை 'பட்ஜட்' தோல்வி

திருகோணமலை மாவட்டம், வெருகல் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்தின் முதலாம் வாசிப்பு ஒரு மேலதிக வாக்கால் நேற்று தோல்வி கண்டது.

இந்நிலையில், இரண்டாம் வாசிப்பை எதிர்வரும் 10ஆம் திகதி நடத்த சபை தீர்மானித் 2

## வலி. வடக்கு சபை 'பட்ஜட்' ஏகமனதாக நிறைவேற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்., வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் தவிசாளர் சோ.சுகிர்தனால் இன்று சபையில் முன்வைக்கப்பட்டது.

39 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் இன்று கலந்து கொண்ட 29 உறுப்பினர்களும் வரவு - செலவுத் திட்டத்துக்குத் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இன்றைய சபை 2

## வல்வெட்டித்துறை நகர சபை 'பட்ஜட்' மீண்டும் தோற்கடிப்பு

### பதவியிழந்தார் நகர சபைத் தலைவர் செல்வேந்திரா

(ந.லோகதயாளன்)

வல்வெட்டித்துறை நகர சபையின் வரவு - செலவுத் திட்டம் இன்று இரண்டாவது முறையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபை பட்ஜட் கூட்டம் இன்று நகர சபைத் தலைவர் என். செல்வேந்திரா தலைமையில் நடைபெற்றது.


அதன்போது கடந்த 17ஆம் திகதி சபையில் முன்வைக்கப்பட்ட பட்ஜட் தோற்கடிக்கப்பட்ட நிலையில், இன்று திருத்தங்களுடன் சபையில் முன்வைக்கப்பட்டபோதும் அதுவும் தோற்கடிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் 2



### கொட்டன்களுடன் குவிக்கப்பட்ட கடற்படையினர்

# மாதகலில் காணி அளவீட்டுப் பணி மக்களால் இன்றும் தடுத்துநிறுத்தம்







(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் – மாதகல் கிழக்குப் பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளைச் சுவீகரிக்கும் முயற்சி கடற்படையினர், கடற்படை புலனாய்வாளர்கள் மற்றும் இராணுவ புலனாய்வாளர்கள் ஆகியோரின் அச்சுறுத்தல்களையும் தாண்டி இன்றும் மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. 2

### "சர்வதேசமே நீதியைப் பெற்றுக்கொடு"

## காணாமல்போனோரின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் இன்று ஆர்ப்பாட்டம்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் இன்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 2

## நிதி வேண்டாம்; நீதியே வேண்டும்

### வவுனியாவில் உறவுகள் வலியுறுத்து




(வவுனியா நிருபர்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று காலை ஆர்ப்பாட 2

## கிளிநொச்சியிலும் உறவுகள் கவனவீர்ப்புப் போராட்டம்!



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் மாதத்தில் இறுதியாக வரும் 30 திகதிகளில் நடத்திவரும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் கிளை அலுவலகம் முன்பாக 2

## யாழ். ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா

(இ.கலையமுதன்)

யாழ். மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் 'தூய நகரம்' திட்டத்திற்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட 2

## வடமராட்சியில் இன்றும் கரையொதுங்கிய சடலம்



(ந.லோகதயாளன்)

யாழ்., வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று இன்று கரையொதுங்கியது. 2

### வெருகல் சபை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

13 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 7 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிகொண்டதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களை மட்டும் கொண்ட பிரதேச சபையாக இது இருக்கின்ற போதிலும் தேசிய சிங்களக் கட்சிகளும் ஆசனங்களைப் பெற்றுள்ளன.

அத்துடன் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல சபைகளில் ஆட்சி அமைத்தாலும் பிற கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியாக ஆட்சியமைத்த சபை இதுவாகும்.

இப்படிப்பட்ட பெருமைகளைக் கொண்ட சபையின் பாதீடு அதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இருவர் எதிராக வாக்களித்தமையால் இந்த நிலை சபைக்கு ஏற்பட்டுள்ளது.

### வலி. வடக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 7 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலா ஒவ்வொரு உறுப்பினரும் கலந்துகொள்ளாத அதே வேளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் புதிய உறுப்பினர் ஒருவரும் இது வரை நியமிக்கப்படவில்லை.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 17 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 8 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா 2 உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(இன்னொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

### வல்வெட்டித்துறை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் கே. கருணாந்தராசா(வயது 76) கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கடந்த ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி உயிரிழந்தார். அதையடுத்து புதிய தலைவராக என்.செல்வேந்திரா கடந்த செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

இந்நிலையில், அவரால் முன்வைக்கப்பட்ட இரு பட்ஜட்டுக்களும் தோல்வியடைந்துள்ளன. இதனால் நகர சபைத் தலைவர் என்.செல்வேந்திரா பதவியிழந்துள்ளார்.

### காணாமல்போனோரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து காணாமல்போனோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடும் வேண்டாம். காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகமும் வேண்டாம், எங்களுக்கு சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் வலியுறுத்தினர்.

### நீதி வேண்டாம்; .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டவர்கள் அரசுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர். அத்துடன் தமக்கான நீதியையும் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், எங்கே எங்கே உறவுகள் எங்கே?, நீதி வேண்டாம்; நீதியே வேண்டும், ஒளம்பியைத் திணிக்காதே, பாடசாலை சென்ற மாணவர்கள் எங்கே, அரசின் பொறுப்பற்ற பதில்களைக் கண்டிக்கின்றோம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தமையுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

### கிளிநொச்சியிலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நடைபெற்றது.

குறித்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இவர்கள் நீதி வேண்டி கோஷங்களை எழுப்பினர்.

### வடமராட்சியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த நான்கு நாள்களில் யாழ்ப்பாணம் கடற்கரைகளில் மீட்கப்பட்ட நான்காவது சடலம் இதுவாகும்.

உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய சடலத்தை மீனவர்கள் அவதானித்து, கிராம சேவகர் மற்றும் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுகளில் கடந்த நான்கு நாள்களில் 3 சடலங்கள் மீட்கப்பட்டன. அவை இதுவரைக்கு அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### யாழ். ஆரியகுளம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர மேயரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக தியாகந்திரன் அர்ச்சுனா மற்றும் நிலாஜினி தியாகேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும், யாழ். மாநகர சபை உறுப்பினர்கள், யாழ். மாநகர சபை ஆணையாளர், யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்களும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் இசைக் கலைஞர்களுக்கான கௌரவிப்பு இடம்பெறவுள்ளதோடு, கே.பி.குமரன் பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதசங்கம், வாண வேடிக்கைகள், தண்ணீர் விசிறல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

### மாதகலில் காணி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதகல் கிழக்கு ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவு, குசுமந்துறையில் தனியாருக்குச் சொந்தமான ஒரு பரப்பு காணி கடற்படையினரின் தேவைக்கு சுவீகரிப்புக்காக அளவீட்டுப் பணிகள் இன்று நில அளவை திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவிருந்தன.

இந்தநிலையில் நேற்றிரவு 11 மணியளவில் கடற்படையினர் தமது வீட்டுக்கு வருகை தந்து காணியை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து கையொப்பம் வைக்குமாறு கேட்டனர் என காணி உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

அளவீட்டுப் பணிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக குறித்த இடங்களில் ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது கடற்படையினர் கொட்டன்களுடன் குவிக்கப்பட்டு , மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

காணியை அளவீடு செய்வதற்கு எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டு நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்திலிருந்து விலகிச் சென்றனர்.

தொடர்ந்தும் அரசியல் பிரமுகர்கள் மற்றும் கிராம மக்கள் கடற்படை முகாமுக்கு முன்பு அமர்ந்து இருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகைதந்த இளவாலை பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கலந்துரையாடினர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எதிர்வரும் இரண்டாம் திகதி சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து கலந்துரையாடுகிறேன் என வாக்குறுதி வழங்கியதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து சென்றிருந்தனர்.




## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீண்டும் பழங்கால நிலைமை

மக்களின் அத்தியாவசிய சேவை ஒன்றில் ஆபத்து நிலைமை ஏற்பட்டிருப்பது நாட்டு மக்கள் மத்தியில் பீதியையும் அச்சத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

காஸ்சிலிண்டர்கள், காஸ்அடுப்புகளில்அடுத்தடுத்து ஏற்படும் வெடிப்புகள் பற்றிய செய்திகள் நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு குடும்பத்திலும் பீதியைக் கிளப்பியிருப்பது உண்மை.

நேற்று மாத்திரம் ஒரே நாளில் பத்து இடங்களில் காஸ் சிலிண்டர் வெடிப்பு இடம்பெற்றிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. பெரும்பாலும் எல்லா வெடிப்புகள் சம்பந்தமாகவும் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நேற்று ஹற்றன், மல்லியப்புவ, மாரவில, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஹன்வெல்ல, பாதுக்கை, எம்பிலிப்பிட்டிய, மாவனல்ல, மாத்தறை ஆகிய இடங்களில் வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன. தவிரவும், வெடிப்புகள் இடம்பெற்று பொலிஸாருக்கும் தகவல் கிட்டாத இடங்களும் இருக்கக் கூடும்.

திடீரென காஸ் சிலிண்டர் வெடிப்புகள் இடம்பெறுகின்றமை நாடளாவிய ரீதியில் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. நடுத்தரவசதியுடையகுடும்பங்கள்ஒவ்வொன்றும் – நகர்ப்புற குடியிருப்பாளர்கள் ஒவ்வொருவரும் சிலிண்டர் வெடிப்பு அச்சத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

இது, தேசிய பாதுகாப்புச் சிக்கல் போன்ற விவகாரம். அதனால் இது தொடர்பில் விரைந்து கவனமும் நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

ஆனால் அரசுத் தரப்பிலிருந்து பொறுப்பான பதில் ஏதும் இன்னமும் வரவில்லை.

அரசு தடுமாறுகின்றதே தவிர மக்களுக்கு நம்பிக்கை தரும் வழியில் முடிவு எதனையும் அறிவிப்பதாக இல்லை.

குறைந்த பட்சம் இந்தத் திடீர் அனர்த்த நிலைக்குக் காரணம் என்ன, அத்தகைய விபரீதம் நேராமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பன தொடர்பாக வழிகாட்டல் கூட இன்னும் தெளிவாக விடுக்கப்படவில்லை.

ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் சமையல் முடியும் வரை நெருப்பை மடியில் கட்டிக் கொண்டு பணியாற்றுவது போல இக்கட்டு.

உலகம் முன்னேறிக் கொண்டு இருக்கின்றது. வாழ்க்கையின் ஒவ்வொரு அலகிலும் நவீனத்துவம் உட்புகுந்து கொண்டிருக்கின்றது.

ஆனால், இலங்கையிலோ என்ன ராசியோ தெரியவில்லை, கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த பின்னர் வாழ்க்கை பின்னோக்கி நகரும் நெருக்கடி.

ஏற்கனவே விவசாய முறைமை 1940கள் நிலைமைக்குச் செல்லும் சூழல். அப்போது நாட்டில் இரசாயன உரப்பாவனை, இரசாயனக் களைகொல்லிகள் இல்லை. அந்தப் பழைய நிலைமை தவிர்க்க முடியாதது, சரியானது என்று கூறி அதை நோக்கி முழுநாட்டையும் நகர்த்த முயன்றது கோட்டா அரசு. அதில் அது தோற்றுப் போனது தான் மிச்சம்.

எரிபொருளுக்கு எப்போது தட்டுப்பாடு வரும், மீண்டும் மாட்டு வண்டில் யுகத்துக்குள் நாடு பிரவேசிக்கும் என்று தெரியவில்லை.

மின்சாரமும் காணாமல் போகும் ஆபத்தும் உண்டு. இனிமேல் குப்பி விளக்கு வாழ்க்கைதானோ தெரியவில்லை.

காஸ் சிலிண்டர் வெடிப்புக்கு அஞ்சும் மக்கள் திரும்பவும் விறகு அடுப்புக்குச் செல்லும் கட்டமும் விரைவில் வந்தாலும் வரும்.

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை பாதீடு ஏகமனதாக நிறைவேற்றம்



வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் வாக்கெடுப்பு எதுவுமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் கொல்லங்கலட்டியிலுள்ள தலைமையக மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் வரவு – செலவுத் திட்ட அங்கீகாரிப்புக்கான விசேட அமர்வு இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

39 உறுப்பினர்களைக் கொண்ட வலி. வடக்கு பிரதேசசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 17 அங்கத்தவர்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 6 அங்கத்தவர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 2 அங்கத்தவர்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி 2 அங்கத்தவர்களையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 4 அங்கத்தவர்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 8 அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது.

இவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினரும் சுகவீனம் காரணமாக சபை அனுமதி பெற்று கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஓர் உறுப்பினர் அமரத்துவமடைந்தமையால் அவருக்கான பதிலீட்டு உறுப்பினர் இதுவரை நியமிக்கப்படவில்லை. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் எவரும் அமர்வில் கலந்துகொள்ளவும் இல்லை.

வரவு – செலவுத் திட்ட வரைவு சபையில் தவிசாளர் சுகிர்தனால் சமர்ப்பிக்கப்பட்டது. சபை உப தவிசாளர் இராசேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களான ஜெயரட்ணம், நிகேதன் ஆகியோரால் பாதீடு தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் பொ.தங்கராசா பாதீட்டை முன்மொழிய, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தாமோதரராஜ் வழிமொழிய சபைக்கு வருகைதந்திருந்த 29 உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் வரவு – செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதிக்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் கௌரவிப்பு




யாழ்.மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்குவை கௌரவிக்கும் நிகழ்வொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் – கோண்டாவில் பகுதியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் ஆதரவில் கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வில் மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு, பொன்னாடை போர்த்தி நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

# 5 ஆவது மாடியில் இருந்து தவறி விழுந்து நுவரெலியாவில் ஒருவர் உயிரிழப்பு



நுவரெலியாவில் சுற்றுலா விடுதி ஒன்றில் ஊழியர்கள் தங்கியிருந்த ஐந்தாவது மாடி அறையில் இருந்து தவறி விழுந்து சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 3 மணியளவில் நிகழ்ந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த (வயது – 47) இரண்டு பிள்ளைகளின் தந்தையான தரங்க பியதர்ஷன ஹெட்டியாராச்சி என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் மேற்படி சுற்றுலா விடுதியில் மேற்பார்வையாளராகப் பணியாற்றி வந்துள்ளார்.

அவர் தங்கியிருந்த ஐந்தாவது மாடியில் உள்ள அறையின் ஜன்னல் வழியே தவறி விழுந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

மரண விசாரணைகளின் பின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தென்னாபிரிக்காவில் இருந்து நெதர்லாந்து சென்ற 13 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று!

தென்னாபிரிக்காவில் இருந்து நெதர்லாந்து சென்ற 13 பேருக்கு, புதிய கொரோனா வைரஸ் திரிவான ஒமிக்ரோன் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில்இருந்து இரண்டு விமானங்களில் நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமுக்கு சென்ற 61 பயணிகளில் 13 பேருக்கே ஒமிக்ரோன் பாதிப்பு இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஐரோப்பிய நாடுகளான பிரித்தானியா, இத்தாலிமற்றும்ஜேர்மனிஆகிய நாடுகளில் புதிய திரிவான ஒமிக்ரோன் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள நிலையில், தற்போது நெதர்லாந்திலும் இந்த பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட கொவிட் தொற்றுகள் மற்றும் புதிய மாறுபாடு குறித்த கவலைகளுக்கு மத்தியில், நெதர்லாந்தில் கடுமையான கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வரவிருக்கும் நிலையில், இந்தப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

விருந்தோம்பல் மற்றும் கலாச்சார அரங்குகள் மற்றும் வீட்டுக் கூட்டங்களுக்கான வரம்புகள் ஆகியவை இதில் அடங்கும். தென்னாபிரிக்காவில் இருந்துதிரும்பியவர்கள்கொவிட் பரிசோதனை செய்து கொள்ளுமாறு நெதர்லாந்து சுகாதார அமைச்சர்ஹ்யூகோடிஜோங்கே அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். 'நெதர்லாந்தில் அதிக தொற்றுகள் இருப்பதை நினைத்துப் பார்க்க முடியாது' என்று அவர் கூறினார்.

# பிரிட்டனால் இணைக்கப்பட்டன 6 நாடுகள் சிவப்புப் பட்டியலில்

தென் ஆபிரிக்காவில் புதிதாக உருமாற்றம் அடைந்த பி.1.1.529 என்ற வகை கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வைரஸின் பரவுதல் வேகமும், வீரியமும் மிக அதிகமாக உள்ளது.

இந்த புதிய வகை வைரஸானது, அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

புதிய வகை வைரஸுக்கு எதிராக தடுப்பூசியின் செயல் திறனும் மிகக் குறைவாக உள்ளதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.

இதனால், உலக நாடுகள் கூடுதல் விழிப்புடன் கண்காணிக்கத் தொடங்கியுள்ளன.

அந்த வகையில், புதிய வகை வைரஸ் பிரிட்டனில்பரவாமல்தடுக்கும்நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக தென் ஆபிரிக்கா,நமிபியா,ஜிம்பாப்வே, போத்ஸ்வானா,லெசோத்தோ,எஸ்வாதினி (ஸ்வாசிலாந்து) ஆகிய தெற்கு ஆபிரிக்க நாடுகளுக்கான விமான சேவையை பிரிட்டன் அரசு தற்காலிகமாக ரத்து செய்துள்ளது.



மேலும், கடும் பயணக் கட்டுப்பாடுகளை விதித்து அந்த 6 நாடுகளையும் சிவப்பு பட்டியலில் பிரிட்டன் இணைத்துள்ளது.இந்த 6 நாடுகளில் இருந்து பிரிட்டன் வருவோர்,அரசு அங்கீகாரம் பெற்ற ஹோட்டலில் 10 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பறக்கும் மர்மப் பொருள்கள்; ஆராய்வதற்கு குழ அமைப்பு

அமெரிக்காவின்பாதுகாக்கப்பட்ட வான் பரப்பில் 'பறக்கும் மர்மப் பொருள்கள்' காணப்பட்டமைதொடர்பானதகவல்களைப் பற்றி ஆராய ஒரு நடவடிக்கைக் குழுவை அமைத்துள்ளது அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன். ஆர்வ மூட்டும் பொருள்கள் பற்றி ஆராய்ந்து, தொடர்புடைய அச்சங்களைப் போக்க இந்தக் குழு உழைக்கும் என்று செவ்வாய்க்கிழமை பென்டகன் அறிவித்துள்ளது.

இந்த பறக்கும் மர்மப் பொருள்களை இராணுவ விமானிகள் பார்த்துக் குழம்பியுள்ளனர். இவை குறித்து தகவல்களும் அளித்துள்ளனர்.

பறக்கும் மர்மப் பொருள்கள் தோன்றின என வந்த இத்தகைய 144 தகவல்களை ஆராய்ந்து உண்மையை வெளிக் கொண்டு வரும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இராணுவ அறிக்கை ஒன்று கடந்த ஜூன் மாதம் வெளியானது. ஆனால், பறக்கும் மர்மப் பொருள் குறித்து எந்த விளக்கத்தையும் அந்த அறிக்கையால் தர முடியவில்லை.

ஆனால், இந்தப் பொருள்கள்வேற்றுக்கிரகத்தைச்சேர்ந்தவையாக இருக்கலாம் என்ற கோணத்தை இந்த அறிக்கை மறுக்கவில்லை.

இந்த மர்மப் பொருள்கள், கண்மூடித்தனமாக வானில் பறக்கின்றன என பல தருணங்களில் அமெரிக்க இராணுவம் பதிவுசெய்தஇந்ததகவல்களைப் பற்றி ஆராய்ந்து ஓர் அறிக்கை அளிக்கும்படி அமெரிக்க நாடாளுமன்றம்கேட்டுக்கொண்டது. இதையடுத்து ஜூன் மாதம் அந்த அறிக்கை வெளியானது. ஆனால், அந்த அறிக்கையால் விளக்கம் எதையும் தர முடியாத நிலையில், இப்போது புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

'ஏர்பார்ன் ஆப்ஜக்ட் ஐடென்டிபிகேன் அன்ட் மேனேஜ்மென்ட் சின்க்ரனைசேன் குரூப்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் குழு ஆர்வமூட்டும் பொருள்களை கண்டுபிடித்து, அடையாளம் கண்டு அவை என்ன என்பதையும் விளக்கும் என்று பாதுகாப்புத் துறை துணைச் செயலாளர் கத்லீன் ஹிக்ஸ் பென்டகன் தலைமைக்கு இன்று அளித்த ஒரு குறிப்பில் தெரிவித்துள்ளார்.

உளவுகண்டுபிடிப்புதிறனில் உள்ள குறைபாடுகளைகளை உளவு மற்றும் எதிர் உளவுத் தகவல்களைஅலசிஆராய்வது, இந்த விவகாரம் குறித்து கொள்கைகளைப் பரிந்துரைப்பது ஆகியவையே இந்தக் குழுவுக்கான வழிகாட்டு நெறிகள்.

அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காண முடியாத எல்லா வான்வழி ஊடுருவல்களையும் தீவிரமாக எடுத்துக்கொள்வதாகவும், அவை ஒவ்வொன்றையும் ஆராய்வதாகவும் அமெரிக்கப் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

ஜூன் மாதம் வெளியான அறிக்கையில் சவால்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக்கொள்வதாகவும் கத்லீன் ஹிக்ஸ் அளித்த குறிப்பு கூறுகிறது.

2004ஆம் ஆண்டு முதல் பறக்கும்மர்மப்பொருள்களைப் பார்த்ததாக செய்யப்பட்ட 144 பதிவுகளில் ஒரே ஒரு நிகழ்வுக்கு மட்டும் விளக்கம் கிடைத்துள்ளது. மீதி 143 நிகழ்வுகளுக்கு எந்த விளக்கமும் இல்லை.

இதெல்லாம் வேற்றுக்கிரக நடவடிக்கையாக இருக்கும் என்று குறிப்பிட போதுமான அறிகுறிகள் இல்லை என்று கூறும் பென்டகன், அவை வேற்றுக்கிரக நடவடிக்கையாக இருப்பதற்கான வாய்ப்புகளையும் மறுக்கவில்லை.

பதிவு செய்யப்பட்ட 144 நிகழ்வுகளில் ஒன்று பெரிதாக ஊதப்பட்ட பலூனாக இருக்கும் என உறுதியாக நம்பப்படுகிறது. பிற நிகழ்வுகள் பற்றி தெரியவில்லை.

ஆனால், அவை சீனா, ரஷ்யா போன்ற பிற நாடுகளின் அதி உயர் தொழில்நுட்ப நடவடிக்கையாக இருக்கலாம், ரேடார் அமைப்புகளில் தென்பட்ட பனிப்படிகம் போன்ற இயற்கைப் புலப்பாடுகளாக அவை இருக்கலாம், அல்லது சில அமெரிக்க நிறுவனங்களின் ரகசிய நடவடிக்கையாக இருக்கலாம் என்பது உள்ளிட்ட விளக்கங்கள் தெரி விக்கப்பட்டுள்ளன.

ஆனால், தெளிவான விளக்கம் இதுவரை கிடைக்கவில்லை.

# பிரித்தானியாவில் ஒமிக்ரோன் மாறுபாட்டின் மூன்றாவது தொற்று கண்டுபிடிக்கப்பட்டது

பிரித்தானியாவில் மிக வேகமாக பரவும் ஆற்றல் கொண்ட ஒமிக்ரோன் கொவிட் மாறுபாட்டின் மூன்றாவது தொற்று, கண்டறியப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நபர் தற்போது பிரித்தானியாவில் இல்லை எனவும், அவர் லண்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் பகுதிக்கு வந்துசென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த தொற்று தென்னாபிரிக்காவிற்கு பயணம் செய்வதோடு தொடர்புடையது என்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த நபர் பார்வையிட்ட பகுதிகளில், பிரித்தானியாவின் சுகாதார பாதுகாப்பு முகவரகம் சோதனைகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமையன்று எசெக்ஸ் மற்றும் நாட்டிங்ஹாம்–யரில் இரண்டு உறுதிப்படுத்தப்பட்ட தொற்று பதிவுசெய்யப்பட்ட பின்னர் இது வருகின்றது. இதன்மூலம் பிரித்தானியாவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது. ஒமிக்ரோன் திரிவு கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, பிரித்தானியாவில் கடைகளிலும்பொதுப்போக்குவரத்திலும் கட்டாய முகக்கவசங்கள் என்ற கட்டுப்பாடு நடைமுறைக்கு வந்துள்ளது.

மேலும், கல்வித்துறைஇப்போது 7ஆம் ஆண்டு மற்றும் அதற்கு மேல் உள்ள மாணவர்களும், பாடசாலை ஊழியர்கள் மற்றும் பார்வையாளர்களும் வகுப்புவாத பகுதிகளில் முகக்கவசம் அணியுமாறு அறிவுறுத்தி வருகிறது.

இடைநிலைப் பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் உட்பட பிரித்தானியாவில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கும், குழந்தை பராமரிப்பு அமைப்புகளில் உள்ள ஊழியர்களுக்கும் இந்த நடவடிக்கை பொருந்தும்.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஒமிக்ரோன் பரவினால் உயிரிழப்பு அதிகரிக்கும்!

## டாக்டர் ராதாகிருஷ்ணன் எச்சரிக்கை



தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட புதிய வகை கொரோனா வைரஸான ‘ஒமிக்ரோன்’ மிக வேகமாக பல நாடுகளிலும் பரவிவருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் புதிய வைரஸ் இந்தியாவுக்குள் பரவிவிடாமல் தடுக்க இந்திய மத்திய அரசு அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அனைத்து மாநிலங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

இந்திய மத்திய அரசின் அறிவித்தல் குறித்து தமிழக மக்கள் நல்வாழ்வு துறையின் முதன்மைச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன், அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள், விமான நிலைய இயக்குநர்கள் சென்னை மாநகராட்சி கமிஷ்னர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். ‘ஒமிக்ரோன்’ வகைக் கொரோனாவையும் தடுப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

கொரோனா தற்போது கட்டுக்குள் வந்துவிட்டதாக பலரும் அலட்சியமாக முகக்கவசம்கூட அணியாமல் செல்வதை அவதானிக்க முடிகிறது. இது மிகப் பெரிய தவறாகும். எந்த ஒரு வைரஸும் நம்மைத் தாக்காமல் இருக்க வேண்டுமானால் முகக்கவசம்தான் சிறந்த பாதுகாப்பாகும். எனவே கண்டிப்பாக அனைவரும் முகக்கவசம் அணியவேண்டும்.

தற்போது தென்னாபிரிக்காவில் புதியதாக உருமாறி வந்துள்ள ஒமிக்ரோன் வைரஸ் பல நாடுகளில் வேகமாகப் பரவி விட்டது. இன்னும் இந்தியாவிற்குள் நுழையவில்லை. ஆனாலும் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. ஏனென்றால் அது போன்ற வீரியமிக்க வைரஸ் பரவினால் அதன் எதிர்விளைவுகள் மிக அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும். அதிக உயிரிழப்புக்களைக் கூட உருவாக்கிவிடும்.

இதைக் கருத்தில் கொண்டு கொரோனா காலத்தில் நாம் மேற்கொண்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் இப்போதும் ஒவ்வொருவரும் கைக்கொள்ள வேண்டும். இப்போதுள்ள சூழலில் கொரோனாவுக்குத் தான் தடுப்பூசி உள்ளது. இதில் 2 தவணைகளுக்கான தடுப்பூசிகளைப் போடாதவர்கள் இன்னும் பலர் உள்ளனர். அவர்களையும் கண்டறிந்து தடுப்பூசி போட நடவடிக்கை எடுத்துவருகிறோம். ஒரு தவணைதடுப்பூசிபோடாதவர்களும் விரைந்து தடுப்பூசி போட்டுக்கொள்ளவேண்டும்.

முன்னெச்சரிக்கையாக வெளிநாட்டில் இருந்து தமிழகம் வரும் பயணிகளுக்கு ஆர்.டி.பி.சி.ஆர். சோதனை நடத்தப்படுகிறது. தென்னாபிரிக்கா, ஐரோப்பா, பிரேஸில், பங்களாதேஷ், போட்ஸ்வானா, மொரிசீயஸ், சிம்பாப்வே, சிங்கப்பூர், இஸ்ரேல் உள்ளிட்ட பிரதேச நாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு வைரஸ் தொற்று இல்லாவிட்டாலும் அரசு சொல்லும் வழிமுறைகளை அவர்கள் தவறாமல் பின்பற்றவேண்டும். கண்டிப்பாக முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். தனி நபர் இடைவெளி, தனிநபர் சுகாதாரம் ஆகியவற்றை மிகச்சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். தற்போது மழைக்காலமாக இருப்பதால் சுடவைத்து ஆறிய தண்ணீரையே அனைவரும் குடிக்கவேண்டும். வயிற்றுப்போக்கு போன்ற உடல் உபாதைகள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும், என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் வலியுறுத்தியிருக்கிறார்.



# வேளாண் சட்டங்களை ரத்துச் செய்யும் மசோதா இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது

இந்திய நாடாளுமன்றம் நேற்றுக்கூடியதும் காங்கிரஸைச் சேர்ந்த பிரதீபா சிங், பா.ஜனதாவைச் சேர்ந்த ஜியானேஸ்வர் பட்டீல் ஆகியோர் புதிய எம்.பிக்களாகப் பதவியேற்றனர். அதைத்தொடர்ந்து மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் ஆஸ்கர் பெர்ணான்டஸ், கல்யான் சிங், செங்குட்டுவன் உள்பட எட்டுப்பேருக்கு சபையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கேள்வி நேரம் தொடங்கியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். வேளாண் சட்டத்தால் விவசாயிகள் மரணமடைந்தமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து எதிர்கட்சி உறுப்பினர்கள் சபையில் கோஷமெழுப்பினர். எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக சபா நாயகர் ஓம் பிர்லா அவையை மதியம் 12 மணி வரை ஒத்திவைத்தார்.

12 மணிக்குப் பின்னர் மக்களவை கூடியதும் 3 வேளாண் சட்டங்களையும் ரத்துச் செய்ய வழிவகுக்கும் மசோதாவை மத்திய வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தாக்கல் செய்தார். காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த மசோதா மீது விவாதம் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியபோதும், அதை ஏற்க சபாநாயகர் மறுத்ததையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளிக்கு இடையே 3 வேளாண் சட்டங்களையும் ரத்துச் செய்யும் மசோதாவுக்கு குரல் வாக்கெடுப்பு மூலம் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து மாநிலங்களவையிலும் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த 3 வேளாண் சட்டங்களையும் ரத்துச் செய்யவுள்ளோம் என இந்தியப் பிரதமர் மோடி கடந்த 19 ஆம் திகதி அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வேளாண் சட்டங்களை மத்திய அரசு திரும்பப் பெறுவதை விவசாய சங்கங்கள் வரவேற்றுள்ள போதிலும் குறைந்தபட்ச ஆதரவு விலைக்குச் சட்ட அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று அவை கோரிக்கை விடுத்துள்ளன. இந்தக் கோரிக்கை நிறைவேறும் வரை தொடர்ந்து போராட்டம் நடைபெறும் என்றும் அவை அறிவித்துள்ளன.

விவசாயிகளின் இந்தக் கோரிக்கைக்கு அமைய, குறைந்தபட்ச கொள்முதல் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தி.மு.கவும் நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளது. இதற்கான ஒத்திவைப்புத் தீர்மானத்தை தி.மு.க. சார்பில் டி.ஆர்.பாலு சமர்ப்பித்தார். இதேபோன்று வேறு பல கட்சிகளும் தங்கள் மாநில விவகாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மனுக்களை அளித்துள்ளன.

இந்தக் கூட்டத்தொடரில் மொத்தம் 29 மசோதாக்களைத் தாக்கல் செய்ய இந்தியமத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தே.மு.தி.க. தனித்துப் போட்டி




டிசெம்பர் மாத இறுதியில் தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அரசியல் கட்சிகள் அதற்காக தங்களை ஆயத்தப்படுத்திவருகின்றன.

ஒவ்வொரு கட்சியிலும் வேட்பாளர்களுக்கான விருப்ப மனுக்களைப் பெறும் படலம் தொடங்கியிருப்பதோடு கூட்டணி அமைப்புகளும் ஏறத்தாழ இறுதி செய்யப்பட்டு தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சு நடைபெறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் தமிழக நகர்ப்புற உள்ளாட்சிச் தேர்தலில் தே.மு.தி.க. தனித்துப் போட்டியிடும் என விஜயகாந்த் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தே.மு.தி.க. தனித்துப் போட்டியிடும். தே.மு.தி.கவில் அடிப்படை உறுப்பினராக இருந்தால்கூட எந்தப் பதவிக்கும் போட்டியிட விருப்ப மனுக்களை அளிக்கலாம். டிசெம்பர் முதலாம் திகதி முதல் ஏழாம் திகதி வரை அந்தந்த மாவட்டத் தலைமை அலுவலகத்தில் விருப்ப மனுக்களைப் பெற்றுக் கொள்ளலாம், என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# டெல்லியில் கட்டுமானப் பணிகளுக்கு தடை தொடருமாம்

தலைநகர் டெல்லியில் காற்று மாசைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. முதலில் நவம்பர் 21 ஆம் திகதி வரை கட்டுமானம், கட்டட இடிப்புப் பணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டது. அரசுத் துறைகளின் ஊழியர்கள் வீட்டிலிருந்து 100 சதவீதம் வேலை செய்யவேண்டும் என அறிவிக்கப்பட்டதோடு பாடசாலைகளும் கல்லூரிகளும் மூடப்பட்டன.

வாகனங்களால் ஏற்படும் புகையின் அளவைக் குறைக்கும் வகையில் டெல்லி நகருக்குள் 26 ஆம் திகதி வரை பாரவூர்திகள் நுழையத் தடை விதிக்கப்பட்டது. எனினும் காற்றின் தரம் எதிர்பார்த்த அளவிற்கு சீரடையவில்லையென்பதால், கட்டுமானப்பணிகளுக்கு உச்ச நீதிமன்றம் மீண்டும் தடை விதித்தது.

எனினும், காற்று மாசு தொடர்ந்து மோசமான நிலையிலேயே இருப்பதால் கட்டுமானப் பணிகள் மற்றும் கட்டுமான இடிப்பு நடவடிக்கைகளுக்கான தடையானது, மறு உத்தரவு வரும் வரை தொடர்ந்து நீடிக்கும் என டெல்லி சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால் ராய் அறிவித்துள்ளார். அதேசமயம், குழாய் மற்றும் நீர் வழங்கல் பணிகள், உட்புற அலங்காரம், மின்சார வேலை மற்றும் தச்சு வேலை போன்ற பெரியளவு வளிமண்டல மாசுக்களை ஏற்படுத்தாத கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுத்தப்படும் பாரவூர்திகள் தவிர்த்து பிற பாரவூர்திகள் நுழைவதற்கான தடை டிசெம்பர் 7 வரை தொடரும் என்றும், எரிவாயுவால் இயக்கப்படும் வாகனங்கள் மற்றும் மின்சார பாரவூர்திகள் போன்றன டெல்லிக்குள் நுழைய அனுமதிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். கட்டுமானப் பணிகளுக்கு தடை விதிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு தலா 5,000 ரூபா நிதியுதவி வழங்கப்படும் என்று முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்திருந்தார். மூடப்பட்ட பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் நேரடி வகுப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசு அலுவலகங்கள் மீண்டும் திறக்கப்பட்டமையால், அரசு ஊழியர் குடியிருப்புகளிலிருந்து ஊழியர்களை அழைத்துச் செல்வதற்காக சிறப்பு பஸ் சேவையையும் டெல்லி அரசு தொடங்கியுள்ளது.

# மட்டு. கர்பலா அல்மனார் பாடசாலை அதிபரை இடமாற்றக் கோரி மாணவர்கள் போராட்டம்



மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள கர்பலா அல்மனார் வித்தியாலய அதிபரை உடனடியாக பாடசாலையை விட்டு இடமாற்றுமாறு கோரி, மாணவர்களும் பெற்றோர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாடசாலையின் அதிபர், மாணவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கிறார் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். இங்கு வருகை தந்த காத்தான்குடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.கலாவுதீன், இந்த விடயம் தொடர்பில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எஸ்.உமர் மௌலானாவின் கவனத்துக்கு கொண்டு சென்றார்.

வலயக் கல்விப் பணிப்பாளரின் நடவடிக்கையின் கீழ், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வியலுவலகத்தின் நிர்வாகத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரமீஸ் தலைமையில் பாடசாலைக்கு வருகை தந்த அதிகாரிகள் குழு, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோருடன் பேச்சில் ஈடுபட்டனர். இதையடுத்து ஆர்ப்பாட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்ததுடன், மூன்று வாரங்களுக்குள் இதற்கான தீர்வை பெற்றுத்தருகிறோம் எனவும் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோரிடமும் தனித்தனியாக அதிபருக்கு எதிராக முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களையும் எழுத்து மூலம் பெற்றுக்கொண்டனர்.

# திருகோணமலை எண்ணெய்க் குதங்கள்; அரசின் முக்கிய நிலைப்பாடு என்ன?

## நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் கேள்வி

திருகோணமலை எண்ணெய் குதங்களை மீளப்பெற்றுக்கொள்வதாக அரசு தெரிவித்தபோதும் இதுவரை பெற்றுக்கொள்ள வில்லை. அப்படியானால் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன? சீனா, அமெரிக்காவுக்கு நாட்டின் ஏனைய வளங்களை வழங்கியுள்ளதுபோல் இந்திய அரசுடன் இது தொடர்பில் வேறு ஏதாவது ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் அரசாங்கம் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான கபீர் ஹாசிம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற மின்சக்தி அமைச்சு, வலுசக்தி அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில்,

இந்தியாவுக்கு வழங்கி இருக்கும் திருகோணமலை எண்ணெய்க்குதங்களை மீளப் பெற்றுக் கொள்வதாக அரசு தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் தற்போது எமது அரசின் காலத்தில் மேற்கொண்டுள்ள ஒப்பந்தம் காரணமாக அதனை மீளப்பெற முடியாதுள்ளதாக தெரிவித்து, அதனை தட்டிக்கழித்து வருகிறது. எமது அரசின் காலத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இந்தியாவுடன் அது தொடர்பில் புரிந்துணர்வு கடிதப் பரிமாற்றங்களே நடைபெற்றுள்ளன. எந்தவித ஒப்பந்தமும் எமது அரசு செய்யவில்லை.

எனவே இந்த அரசு அவற்றை மீளப்பெற்றுக் கொள்வதற்கு எமது அரசின் கால புரிந்துணர்வு கடிதப் பரிமாற்றங்கள் எந்தவித தடையையும் ஏற்படுத்தப் போவதில்லை.

மற்றும் தற்போதைய அரசு கூறுவதுபோல் எமது அரசும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மேற்படி எண்ணெய்க்குதங்களை வழங்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசு கொழும்பு துறைமுக நகர நிலத்தை சீனாவுக்கு உரித்துரிமையாக வழங்கி இருந்தது. அந்த உரித்துரிமையை இல்லாமலாக்குவதாக நாங்கள் அன்று வாக்குறுதி அளித்தோம். அதேபோன்று ஆட்சிக்கு வந்ததுடன் சீனாவுடன் மோதி, துறைமுக நகரின் உரித்துரைமையை இல்லாமலாக்கி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

ஆனால் இந்த அரசு திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மீளப் பெற்றுக்கொள்வதாக தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்த போதும் இதுவரை அவற்றை பெற்றுக்கொள்ளாமல் இருக்கின்றது. அப்படியானால் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன ? சீனா, அமெரிக்காவுக்கு நாட்டின் ஏனைய வளங்களை வழங்கியுள்ளது போல் இந்திய அரசுடன் அது தொடர்பில் வேறு ஏதாவது ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் அரசு நாட்டுக்கும் மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்றார்.



# சீலாமுனை பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து எரிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீலாமுனை பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து எரிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சீலாமுனை,ஆனந்தன் வீதியிலிருந்து வீட்டில் தனிமையிலிருந்த தி.சத்தியராஜன் என்னும் 69 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மண்ணெண்ணை ஊற்றப்பட்டு தீயிட்டு குறித்த நபர் எரிந்துள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபருக்கு அருகில் கடிதம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் அவர் தற்கொலை செய்துகொண்டாரா என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவஇடத்திற்குவருகைதந்த மாவட்ட குற்றத்தடவியல் பிரிவு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன் களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம்சடலத்தைபார்வையிட்டமையுடன், விசாரணைகளை முன்னெடுத்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தர விட்டுள்ளார்.

# தாண்டியடியில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு



வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாண்டியடி வாழைக்காலை பிரதான வீதியில் நேற்றுக் காலை (29) இடம்பெற்றவிபத்தில்அம்பிளாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான மயிலாப்போடி-சுந்தரலிங்கம் (வயது-59) என்பவரே உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து தனது வயலுக்கான உரத்தை பெற்றுக்கொள்வதற்காக மண்டபத்தடி கமநல கேந்திர நிலையத்திற்குச் சென்று கொண்டிருக்கும்போது குறித்த வீதியில் எதிர்த்திசையில் பயணித்துக் கொண்டிருந்த வான் கட்டுப்பட்டை இழந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் மீது மோதியதில் குறித்த நபர்உயிரிழந்துள்ளார் எனஆரம்பக்கட்டவிசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வானின் உத்தரவிற்கமைவான சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல பொலிஸாருக்கு உத்தர விட்டுள்ளார்.மேலதிகவிசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# 2 கிலோ கேரள கஞ்சாவுடன் காத்தான்குடி நபரொருவர் கைது

2 கிலோ கேரள கஞ்சாவுடன் காத்தான்குடியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி பஸாரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் யாழ்ப்பாணத்தில் இருந்து பிறைந்துரைச்சேனைக்கு வியாபார நோக்கில் கேரள கஞ்சாவினை கடத்தி வந்த நிலையில் வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைவாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவரிடமிருந்து 2 கிலோ அளவிலான கேரள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், நீதிமன்ற உத்தரவின் பேரில் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, இவருடன் தொடர்புடைய நபர்கள் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையுடன், கேரள கஞ்சாவினை வரவழைத்த பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த சூத்திரதாரியை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் தேடி வருகின்றனர்.

# இந்தியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டி இறுதி விக்கெட் இணை நியூசியை காத்தது




இந்தியா - நியூசிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

கான்பூர் மைதானத்தில் கடந்த 25ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, முதல் இன்னிங்ஸிற்காக 345 ஓட்டங்களைச் சேர்த்தது. தனது அறிமுகப் போட்டியில் களமிறங்கியிருந்த ஸ்ரேயஸ் ஐயர் 105 ஓட்டங்களையும் சுப்மன் கில் 52 ஓட்டங்களையும் ஜடஜோ 50 ஓட்டங்களையும் எடுத்தனர். நியூசிலாந்து அணியின் டிம் சவுத்தி 5 விக்கெட்டுகளையும் ஜேமிஸன் 3 விக்கெட்டுக்களையும் அஜாஸ் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை ஆரம்பித்த நியூசிலாந்து அணிக்கு ஆரம்பத்தில் வலுவான அடித்தளம் கிடைத்த போதிலும் அவர்களால் 296 ஓட்டங்களையே பெறமுடிந்தது. டொம் லதம் 95 ஓட்டங்களையும் வில் யங் 89 ஓட்டங்களையும் பெற்றனர். இந்திய அணியின் அக்ஸர் பட்டேல் 5 விக்கெட்டுக்களையும் அஸ்வின் 3 விக்கெட்டுக்களையும் உமேஷ் யாதவ் மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 49 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி 7 விக்கெட்டுக் கள் இழப்புக்கு 234 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டு, நியூசிலாந்து அணிக்கு 284 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. ஸ்ரேயஸ் ஐயர் 65 ஓட்டங்களையும் ரித்திமன் சஹா ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களையும் எடுத்தனர். நியூசிலாந்து அணியின் சவுத்தி மற்றும் ஜேமிஸன் ஆகியோர் தலா 3 விக்கெட் டுக்களையும் அஜாஸ் பட்டேல் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இதனைத்தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய நியூசிலாந்து அணி, இறுதிநாள் ஆட்ட முடிவு வரை 9 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்து போட்டியை வெற்றிதோல்வியின்றி நிறைவுசெய்தது. டொம் லதம் 52 ஓட் டங்களையும் வில்லியம் சொமவில்லி 36 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் ரவீந்திர ஜடேஜா 4 விக்கெட்டுக்களையும் அஸ்வின் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக தனது அறிமுக டெஸ்ட் போட்டியிலேயே ஒரு சதத்தையும் அரைச் சதத்தையும் எடுத்த ஸ்ரேயஸ் ஐயர் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி டிசெம்பர் 3ஆம் திகதி மும்பையில் ஆரம்பமாகவுள்ளது.

# இலங்கை – தீவுகள் டெஸ்ட் மழையினால் தடங்குகின்றது




இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இன்றைய இரண்டாவது நாள் ஆட்டமும் மழையினால் தடைப்பட்டது.

இந்தப் போட்டியின் முதல் நாளான நேற்று பிற்பகல் மூன்று மணியளவிலேயே போட்டி ஆரம்பமாகியிருந்தது. காலியில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழைக்கிடையில் இந்தப்போட்டியில் முடிவொன்று கிட்டுமா, என்பதும் சந்தேகத்துக்கிடமாக உள்ள நிலையிலேயே போட்டி தொடர்கிறது.

நேற்று தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கையணி இன்றும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடி 204 ஓட்டங்களைப் பெற்றவேளை சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய பதும் நிசங்க 73 ஓட்டங்களையும் திமுத் கருணாரத்ன 42 ஓட்டங்களையும் பெற்றனர். மேற்கிந்தியத் தீவுகளணியின் வீரசமி பெர்மோல் 5 விக்கெட்டுக்களையும் ஜோயல் வரிகன் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி இன்று மழையினால் ஆட்டம் தடைப் படும்போது ஒரு விக்கெட்டை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ப்ளக்வூட் 44 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்திருந்தார். ப்ரத்வைட் 22 ஓட்டங்களோடு ஆட்டமிழக்காது களத்திலிருந்தார்.



# 2021ஆம் ஆண்டின் சிறந்த கால்பந்தாட்ட வீரராக லயனொல் மெஸ்ஸி தெரிவு செய்யப்பட்டுள்ளார்

சிறந்த கால்பந்தாட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் பலொன் டி ஆர் தங்க கால்பந்து விருதை ஆர்ஜென்டீனாவின் அணித்தலைவரான மெஸ்ஸி ஏழாவது முறையாக பெற்றுள்ளார். நடப்பு ஆண்டின் பல்வேறு போட்டிகளின் செயல்பாடுகளுக்கு அமைய மெஸ்ஸிக்கு தங்கக் கால்பந்து விருது வழங்கப்பட்டுள்ளது.

முதல்முறையாக 2009 ஆம் ஆண்டு பலொன் டி ஆர் விருதை வென்ற லயனொல் மெஸ்ஸி தொடர்ச்சியாக 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளிலும் இந்த விருதை வென்றிருந்தார். அதனையடுத்து 2015 ஆம் ஆண்டு ஐந்தாவது தடவையாக அவருக்கு அந்த விருது கிடைத்திருந்தது. லயனொல் மெஸ்ஸியின் தலைமையிலான ஆர்ஜென்டீனா அணி, இந்த வருடம் நடைபெற்ற 15ஆவது கோபா அமெரிக்கா தொடரின் கிண்ணத்தை 28 ஆண்டுகளில் முதல்முறையாக வென்றிருந்தமை சிறப்பாகும்.

இந்த விருதைப்பெற்று உரையாற்றிய மெஸ்ஸி, நான் ஓய்வுபெறப்போகிறேன் என்று என்னிடம் அடிக்கடி கேட்கத் தொடங்கினர். ஆனால், இப்போது நான் இங்கே இந்த விருதைப் பெற்று நிற்கிறேன். மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். நான் இன்னும் எத்தனை ஆண்டுகள் விளையாடுவேன் என எனக்குத் தெரியவில்லை. ஆர்ஜென்டீனா அணிக்கு கோபா அமெரிக்கா கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்ததன் மூலம் என்னுடைய கனவு நனவானது. அதை எனது சக வீரர்களுக்கு அர்ப்பணிக்கிறேன், என்று தெரிவித்துள்ளார்.

மகளிர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனையான அலெக்சியா புடெலஸ் மூன்றாவது முறையாக தங்கக் கால்பந்து விருதை வென்றிருக்கிறார். 27 வயதான புடெலஸ், இந்த ஆண்டு சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டத் தொடரில் பார்சிலோனாவின் வெற்றிகளில் முக்கிய பங்கு வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# 2025 ஆம் காலப்பகுதியில் பட்டினி நிலைமை வரலாம்

## இன்பராசா ஆருடம்



தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாட்டால் 2025 காலப்பகுதியில் இலங்கையில் பெரும் பசி, பட்டினி நிலைமை ஏற்பட வாய்ப்புள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் த.இன்பராசா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஒரு நாட்டின் வறுமையும் பொருளாதார வீழ்ச்சியுமே போருக்கு வழிவகுக்கின்றது எனவும் த.இன்பராசா சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தற்போதைய அரசாங்கம், இந்த நாட்டை மீண்டும் அழிவுப்பாதைக்குத் தள்ளும் செயற்பாட்டையே முன்னெடுக்கின்றது என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நாட்டின் ஜனாதிபதி, தமிழ் மக்கள் அங்கீகரிக்காத ஒருவர். பெரும்பான்மையின மக்களால் கொண்டுவரப்பட்ட ஒரு ஜனாதிபதி. இலங்கையில் இரண்டு நாடு இருக்கின்றது என்பதைத் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலின்போதே காட்டியிருக்கின்றார்கள். இதனை நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும் சர்வதேச ரீதியிலும் இருப்பவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டுமென த.இன்பராசா கூறியுள்ளார்.

ஆகவே, இத்தகைய நிலைமையில் எமது தமிழ் அரசியல்வாதிகள், மிகத்தந்திரோபாயமான முறையில் இதயசுத்தியுடன் செயற்பட்டு, எமது தமிழ் மக்களுக்கான தீர்வு, பொருளாதாரம் என்பன தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# சுதந்திரக் கட்சியினர் ஒரு போதும் அரசை விட்டு வெளியேறமாட்டார்கள்

## ஹரிசன் ஆருடம்



கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஒரு போதும் அரசாங்கத்தை விட்டு வெளியேற மாட்டார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் பொதுமக்கள் மத்தியில் இத்தகைய கருத்து நிலவி வருவதாக அவர் கூறினார்.

சுதந்திரக் கட்சி தற்போதைய அரசாங்கத்தின் கைக்கூலியாக செயற்படுகிறது எனக் கூறினாலும் அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் ஒரு போதும் அரசாங்கத்தை விட்டு வெளியேற மாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்களும் நாடும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மாற்று வழியை நாட வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் குறிப்பிட்டார்.

# வெடிப்புச் சம்பவங்கள் பிரச்சினையாவதற்கு விலை உயர்வே காரணம் என்கிறார் லசந்த



சமையல் எரிவாயுவின் விலை உயர்வே தற்போது வெடிப்பு சம்பவம் முக்கிய பிரச்சினையாக மாறக் காரணம் என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். நேற்று (திங்கட்கிழமை) நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமீபத்தில் சமையல் எரிவாயு வெடிப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் முறையான விசாரணைகள் நடைபெறுவதை உறுதி செய்வது தமது கடமை என்றும் லசந்த அழகியவண்ண குறிப்பிட்டார்.

2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 233 சமையல் எரிவாயு சிலிண்டர் தொடர்பான வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தனியார் நிறுவனத்தை மேற்கோளிட்டு இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 6 ஆண்டுகளில் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்பதை கூறி இதனை நியாயப்படுத்த முயற்சிக்கவில்லை எனக் குறிப்பிட்ட அவர், சமீபத்தில் வழக்கத்துக்கு மாறாக இடம்பெற்ற வெடிப்புச் சம்பங்களை ஒப்புக்கொள்கிறோம் எனவும் அவர் கூறினார்.

மேலும் இந்த சமபாவங்கள் தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை ஆராய்ந்து வருவதாகவும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

# எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரத் துண்டிப்பு இரண்டும் இருக்காது என்கின்றார் கம்மன்பில

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக கூறப்படுகின்ற போதிலும் மின்சாரத் துண்டிப்பு இருக்காது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் எரிபொருளுக்கு போதிய அந்நியச் செலாவணி இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை பராமரிப்புக்காக 50 நாள்களுக்கு மூடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் இந்த காலப்பகுதியில் நாட்டின் மின்சாரத் தேவை நீர் மின் உற்பத்தி மூலம் பூர்த்தி செய்யப்படும் என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் திறக்கப்பட்ட பின்னரும் மின் உற்பத்திக்கு கூடுதலாக 40 நாள்களுக்குப் போதுமான எரிபொருள் தங்களிடம் உள்ளது என்றும் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

நீர்த்தேக்கங்கள் நிரம்பியுள்ள நீரின் ஒரு பகுதியை விவசாயத்துக்காகவும் மிகுதியை மின் உற்பத்திக்காகவும் விடப்படும் நிலையில் 2022 மார்ச் மாதத்துக்குள், உணவுப் பற்றாக்குறையுடன் நாடு நெருக்கடியைஎதிர்கொள்ளும் என ரணில் விக்கிரமசிங்க எச்சரித்தார்.



# விலைவாசிக்கு எதிர்ப்புத் தெரிவித்து தோட்டத் தொழிலாளர்கள் கவனவீர்ப்பு

ஆயிரம் ரூபா சம்பளத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் மற்றும் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள விலைவாசிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பெருந்தோட்டத் தொழிலாளர்களால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

டொரிங்டன் தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், தேயிலை மலையில் காணப்பட்ட நான்கு அடி, மூன்று அடி கொண்ட வளர்ந்த புற்களை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியும் பதாதைகளை ஏந்தியும் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தோட்ட நிர்வாகம் தற்போது வேலை நாள்களைக் குறைத்துள்ளதாகவும் தேயிலை செடிகளைப் பராமரிப்பதிலிருந்து கைநழுவி விட்டதால் தேயிலை மலைகள் காடாகிக் காணப்படுவதுடன், தொழில் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாங்கள், பொருள்களின் விலை அதிகரிப்பால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளோம் எனவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

அரசாங்கம் தங்களது பிரச்சினைகளைக் கண்டு கொள்வதில்லை எனவும் மலையக அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் மாத்திரம் வாக்குகளைப் பெறுவதற்கு வருகிறார்கள் எனவும் இனி வாக்கு கேட்டு வர வேண்டாம் எனவும் தொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் தங்களுக்கு, உடனடியாக நல்ல தீர்வைப் பெற்றுத்தர சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ்மா அதிபர் விக்ரமரத்ன கொழும்பு மேல் நீதிமன்றுக்கு வருகை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக சாட்சியமளிக்க பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு வருகை தந்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்குத் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே தலைமையிலான விசேட ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.11.2021இல் வெளியிடப்பெற்றது.